# <u>நெல்லிக்குப்பம் நகராட்சி</u>

## <u>நகர் மன்றக் கூட்டம் நிகழ்ச்சி நிரல்</u>

2020–ம் ஆண்டு மார்ச் மாதம் 31–ம் தேதி (31.03.2020) திங்கட்கிழமை மாலை 5.00 மணிக்கு நெல்லிக்குப்பம் நகராட்சி ஆணையர் அறையில் நடைபெற உள்ள நகர் மன்றத்தின் சாதாரண கூட்டத்தில் முடிவு செய்யப்படவுள்ள மன்றப்பொருள்கள் விபரம்.

முன்னிலை : – திரு. எஸ்.பிரபாகரன்
தனி அலுவலர்,
நெல்லிக்குப்பம் நகராட்சி

<u>மன்றபொருள்.1.</u> நெல்லிக்குப்பம் நகராட்சிக்கு சொந்தமான ஜம்புலிங்கம் பூங்கா மேல் நிலை நீர்த்தேக்க தொட்டி (OHT) SC No. 17 ன் மின் மீட்டர் பழுதேர்பட்டதை புதியதாக வாங்கி பொருத்தியதற்கு அவசர அவசியம் கருதி (குடிநீர் விநியோகம் ) நகராட்சிகளின் சட்டம் 1920 பிரிவு 15ன் கீழ் குடிநீர் நிதியில் Enoch Electricals , குடிதாங்கி மெயின் ரோடு , நெல்லிக்குப்பம் அவர்களுக்கு ரூ. 14800/– வழங்கப்பட்டதை மன்றத்தின் பார்வைக்கும் , பதிவிற்க்கும் வைக்கப்படுகிறது .

<u>அலுவலகக்குறிப்பு:–</u> மன்றம் பதிவு செய்யலாம் .

**(ந.க.எண் . 0617/2020/இ1)**

**தீர்மான எண் : 033 அலுவலக குறிப்பினை ஏற்று பதிவு செய்யப்பட்டது .**

<u>மன்றபொருள்.2.</u> நெல்லிக்குப்பம் நகராட்சிக்கு சொந்தமான ஜம்புலிங்கம் பூங்கா மேல் நிலை நீர்த்தேக்க தொட்டியில் உள்ள 400mm சுவிஸ் வால்வு , மெயின் ஸ்பிண்டிங் ரோல் மற்றும் கைடு நெட்டுகள் புதியதாக வாங்கி பொருத்தியதற்கு அவசர அவசியம் கருதி (குடிநீர் விநியோகம் ) நகராட்சிகளின் சட்டம் 1920 பிரிவு 15ன் கீழ் குடிநீர் நிதியில் திருமதி . புவனேஸ்வரி , நெல்லிக்குப்பம் அவர்களுக்கு ரூ. 35000/– வழங்கப்பட்டதை மன்றத்தின் பார்வைக்கும் , பதிவிற்க்கும் வைக்கப்படுகிறது .

<u>அலுவலகக்குறிப்பு:–</u> மன்றம் பதிவு செய்யலாம் .

**(ந.க.எண் . 0618/2020/இ1)**

**தீர்மான எண் : 034 அலுவலக குறிப்பினை ஏற்று பதிவு செய்யப்பட்டது .**

<u>மன்றபொருள்.3.</u> நெல்லிக்குப்பம் நகராட்சி :அம்மா உணவகத்தில் “ உள்ள சிலிண்டர் அடுப்புகள் , தண்ணீர் பைப்புகள் , சின்டெக்ஸ் டாங்குகள் , மாவு அரைக்கும் இயந்திரம் , வாஸ் பேசின்கள் மற்றும் மோட்டார் பம்புகள் பழுது ஏற்பட்டதை சரி செய்து பொருத்தியதற்கு அவசர அவசியம் கருதி நகராட்சிகளின் சட்டம் 1920 பிரிவு 15ன் கீழ் பொது நிதியில் திருமதி .S. புவனேஸ்வரி , நெல்லிக்குப்பம் அவர்களுக்கு ரூ. 23000/– வழங்கப்பட்டதை மன்றத்தின் பார்வைக்கும் , பதிவிற்க்கும் வைக்கப்படுகிறது .

<u>அலுவலகக்குறிப்பு:–</u> மன்றம் பதிவு செய்யலாம் .

**(ந.க.எண் . 0101/2020/இ1)**

**தீர்மான எண் : 035 அலுவலக குறிப்பினை ஏற்று பதிவு செய்யப்பட்டது .**

<u>மன்றபொருள்.4.</u> நெல்லிக்குப்பம் நகராட்சியில் “கொரான வைரஸ் தாக்குதலிருந்து சுகாதாரண முறையில் அலுவலகத்திற்கு வரும் பொது மக்கள் கைகளை சுத்தம் செய்ய அலுவலகம் வெளியே 24 மணி நேரமும் தண்ணீர் வரும் வகையில் இரண்டு வாஸ்பேசின்கள் Sock pit உடன் அமைத்ததிற்கு அவசர அவசியம் கருதி நகராட்சிகளின் சட்டம் 1920 பிரிவு 15ன் கீழ் பொது நிதியில் திருமதி .S. புவனேஸ்வரி , நெல்லிக்குப்பம் அவர்களுக்கு ரூ. 17500/– வழங்கப்பட்டதை மன்றத்தின் பார்வைக்கும் , பதிவிற்க்கும் வைக்கப்படுகிறது .

<u>அலுவலகக்குறிப்பு:–</u> மன்றம் பதிவு செய்யலாம் .

**(ந.க.எண் . 0102/2020/இ1)**

**தீர்மான எண் : 036 அலுவலக குறிப்பினை ஏற்று பதிவு செய்யப்பட்டது .**

<u>மன்றபொருள்.5.</u> நெல்லிக்குப்பம் நகராட்சிக்க சொந்தமான ஆரோக்கியசாமி தெரு உரக்கிடங்கில் (Compost yard ) குப்பைகளை தரம் பிரித்து சுத்தம் செய்யவும் , குப்பைகளை அரைத்து அப்புரப்படுத்தவும் புதிய மும்முனை மின் இணைப்பு பெற மின்வாரியத்திற்கு விண்ணப்பம் அளித்ததின் அடிப்படையில் மீட்டர் வைப்புத் தொகையாக ரூ.9968/– உதவி மின்பொறியாளர் , இ&ப./ த.நா.மி.உ.ப. கழகம் , நகரம் நெல்லிக்குப்பம் அவர்களுக்கு செலுத்தியதை மன்றத்தின் பார்வைக்கும் , பதிவிற்கும் வைக்கப்படுகிறது .<u>அலுவலகக்குறிப்பு:–</u> மன்றம் பதிவு செய்யலாம் .

**(ந.க.எண் . 0103/2020/இ1)**

**தீர்மான எண் : 037 அலுவலக குறிப்பினை ஏற்று பதிவு செய்யப்பட்டது .**

<u>மன்றபொருள் .6.</u> நெல்லிக்குப்பம் நகராட்சி எல்லைக்குட்பட்ட வைடிப்பாக்கம் கிராமம், வார்டு C , பிளாக் 11 T.S.No. 39/1 , பழைய சர்வே எண்.150/1 இடத்தின் பரப்பு **60548** சதுரடியாகும். இவ்விடம் அங்கீகரிக்கப்படாத மனைப்பிரிவாக அமைந்ததால் மனைப்பிரிவின் உரிமையாளர் திரு .ஏ.முருகன் என்பவர் குடியிருப்பு மனைப்பிரிவினை வரன் முறை செய்ய நகர் ஊரமைப்பு ஆணையருக்கு விண்ணப்பம் செய்ததின் பேரில் நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் வி.ம. அவர்கள் கொ.ஒ.ம.வ. / <u>ந.ஊ.உ.</u>இ (வி.ம.) எண்- R 1046/2018 என எண்ணிட்டு குடியிருப்பு மனைப் பிரிவினை கொள்கையளவில் ஒப்புதல் செய்து இந்நகராட்சிக்கு **19.09.2019** ல் வரப்பெற்றுள்ளது. அக்ரி நகர் மனைப்பிரிவில் உள்ள சாலை மற்றும் பூங்காவினை ரூ.100/– முத்திரை தாளில் தானமாக பெற்றுக் கொள்ளவும், மனுதாரர் கட்டணங்கள் செலுத்தியதும் அனுமதி வழங்க மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு:-</u>

வைடிப்பாக்கம் கிராமம், வார்டு C , பிளாக் 11 T.S.No. 39/1 , பழைய சர்வே எண்.150/1 இடத்தின் பரப்பு **60548** சதுர குடியிருப்பு மனைப்பிரிவாக கொள்கையளவில் கொ.ஒ.ம.வ. / ந.ஊ.உ.இ (வி.ம.) எண் R 1046/2018 என எண்ணிட்டு வரப்பெற்றுள்ளது. இதிலுள்ள சாலை மற்றும் பூங்காவினை நகராட்சி ஆணையர் பெயரில் ரூ.100/– முத்திரை தாளில் தானமாக பெற்றுள்ளதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது. மனுதாரர் முழு மனை (அ) பகுதி மனைகளுக்கு கட்டணங்கள் செலுத்தியதும் மனைக்கு வரன்முறை உத்திரவு அளிக்கலாம்.

**ந.க.எண்: 2578/2019/F1**

**தீர்மான எண் : 038 அலுவலக குறிப்பினை ஏற்று பதிவு செய்யப்பட்டது . வரன்முறை உத்திரவு அளிக்கப்பட்டது .**

<u>மன்றபொருள் .7.</u> நெல்லிக்குப்பம் நகராட்சிக்கு சொந்தமான ஆடு அறுக்கும் இடத்திற்கு தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாட்டு வாரியத்தால் வழங்கப்பட்ட ஒப்புதல் காலம் **31.03.2020** வுடன் முடிவடைந்துள்ளது **(2019–20** ம் ஆண்டிற்கு). மேற்கண்ட ஒப்புதல் காலத்தை **2020–2021** ம் ஆண்டிற்கு புதுப்பிக்கப்பட வேண்டும். **2020–2021**ம் ஆண்டு புதுப்பிக்க வேண்டி தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாட்டு வாரியம் கடிதம் எண் F.CUD0450/RS/DEE/TNPCB/CUD/2020 நாள் **02.03.2020**ன்படி ரூ.**8800/–** நிர்ணயம் செய்யப்பட்டு தொகை செலுத்தக்கோரி கடிதம் வரப்பெற்றுள்ளது. அதன் அடிப்படையில் தொகை ரூ.**8800/–** மட்டும் தமிழ் நாடு மாசுக்கட்டுப்பாட்டு வாரியம், கடலூர், மாவட்ட பொறியாளர் அவர்களுக்கு செலுத்திடவும், செலவினத்தை இந்நகராட்சி பொது நதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு

அலுவலகக்குறிப்பு: **1.** மன்றம் அனுமதிக்கலாம்

**2.**தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேல்நடவடிக்கை எடுக்கலாம்.

(ந.க.எண் 3203/2013/எச்1)

**தீர்மான எண் : 039 அலுவலக குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது .**

<u>மன்றபொருள் 8.</u> நெல்லிக்குப்பம் நகராட்சி பொது சுகாதாரம் திடக்கழிவு மேலாண்மை விதிகள் – **2016**: விதி எண்.**4(3)**ன் படி, திடக்கழிவுகளை உருவாக்குபவர்கள் நகராட்சி குப்பை தொட்டிகளில் சேகரிக்க / நகராட்சி வாகனங்கள் மூலம் குப்பை கழிவுகளை அப்புறப்படுத்த சேவை கட்டணம் அலுவலக கடிதம் ந.க.எண்.**624/2017**/எச்**1**ல் நடவடிக்கை எடுக்கப்பட்டு மன்ற தீர்மான எண்.**18**, நாள்.**23.02.2017**ல் மன்றத்தில் நிறைவேற்றம் செய்யப்பட்ட மாவட்ட அரசிதழில் **28.06.2017**ல்

வெளியீடு செய்ததின் அடிப்படையில் நகராட்சி பகுதியில் குடியிருப்பு அல்லாத வணிகம் சம்மந்தமான நிறுவனங்களுக்கு சேவை கட்டணங்கள் நிர்ணயம் செய்து அதன் விகிதத்தின்படி, வசூல் செய்திட நடவடிக்கை மேற்கொண்டபோது வர்த்தக சங்க நிர்வாகிகள் நகராட்சியில் நிர்ணயம் செய்யப்பட்டுள்ள, சேவைக் கட்டணம் கடலூர் மாவட்டத்திலுள்ள சிறப்பு நிலை, தேர்வு நிலை மற்றும் முதல் நிலையை வைட கூடுதலாக உள்ளது எனவும், அதனை குறைத்து நிர்ணயம் செய்தபின்பு கட்டணம் செலுத்த முடியும் என கோரிக்கை மனுக்கள் வழங்கி வருவதுடன், சொத்து வரியினையும் செலுத்தாமல் நிலுவையில் வைத்து வருகின்றனர்.

வர்த்தக சங்கங்கள் தொடர்ந்து சேவை கட்டணங்களை குறைத்து நிர்ணயம் செய்திட வலியுறுத்திவருவதின் காரணமாக மாவட்டத்திலுள்ள இதர நநராட்சிகளின் கட்டணங்களுடன் ஒப்பீடு செய்ததில் நமது நகராட்சியில் விதிக்கப்பட்டுள்ள ஒருசில கட்டண விகிதம் கூடுதலாகவே உள்ளது. எனவே, நெல்லிக்குப்பம் நகரில் நடைபெறும் வர்த்தகம் மற்றும் பொதுமக்கள் வருகை இவற்றினை கருத்தில் கொண்டு, தற்சமயம் உள்ள சேவை கட்டண விகிதத்தினை திருத்தி நிர்ணயம் செய்து மன்றத்தின் ஒப்புதல் பெற்று மாவட்ட அரசிதழில் வெளியீடு செய்து தொடர் நடவடிக்கை மேற்கொள்ளலாம்.

<u>அட்டவணை–I</u>

<u>தற்சமயம் உள்ள சேவை கட்டண விகிதம்</u>

| வ.எண். | இனங்கள் | கட்டணம் |
|---|---|---|
| 1 | டீ ஸ்டால் / சிற்றுண்டி | 100 |
| 2 | காய்கறிகள் வியாபாரம் | 200 |
| 3 | இருசக்கர வாகனங்கள் ஒர்க்ஷாப்/இதர ஒர்க்ஷாப் | 100 |

<u>அட்டவணை–II</u>

<u>பரிந்துரை செய்யப்படும் இனங்கள் மற்றும் சேவை கட்டணங்கள் மாற்றம் செய்யவேண்டிய கட்டண விகிதம்</u>

| வ.எண். | இனங்கள் | கட்டணம் |
|---|---|---|
| 1 | டீ ஸ்டால் / சிற்றுண்டி/மளிகை கடை/மெடிக்கல்ஸ் | 50 |
| 2 | காய்கறி /படி வியாபாரம்/இனிப்பகம்/பேக்கரி | 100 |
| 3 | இருசக்கர வாகனங்கள் ஒர்க்ஷாப்/இதர ஒர்க்ஷாப் | 50 |

மேற்கண்ட அடிப்படையில் நிர்ணயம் செய்திட மன்றத்தின் அனுமதி வேண்டியும், 28.06.2017அன்று மாவட்ட அரசிதழில் பக்க எண்.60 மற்றும் 61ல் வரிசை எண்.3(வணிகம்) (i) (xi) மற்றும் (xv) ஆகியவற்றின் கண்டுள்ள பொருள் மற்றும் கட்டணம் இவற்றினை மாற்றம் செய்து அட்டவணை–IIல் கண்டுள்ளவாறு மாவட்ட அரசிதழில் பிரசுரம் செய்து வெளியீடு செய்திட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு:

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மாற்றம் செய்யப்பட்ட விபரத்தின்படி குறிப்பிட்டுள்ள இனங்களுக்கு நிர்ணயம் செய்யப்பட்ட சேவைக் கட்டண விகிதத்தில் ஜீலை/2017 மாதம் முதல் தொகை வசூல் செய்ய நடவடிக்கை எடுக்கலாம்.
3. ஏற்கனவே, சேவை கட்டணம் கட்டியவர்களுக்கு வித்தியாச தொகையினை திரும்ப தர வழிவகை இல்லை என தெரிவித்து கொள்ளலாம்.

ந.க.எண்.932/2020/எச்1

**தீர்மான எண் : 040 அலுவலக குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது .**

**<u>மன்றபொருள் 9.</u>** உலக நாடெங்கிலும் கொரோனா வைரஸ் காய்ச்சல் பொது மக்களுக்கு பரவி வருவதுடன், உயிர் தேசமும் ஏற்பட்டு வருகிறது. தற்சமயம் இந்நோய் இந்தியாவில் 100 நபர்களுக்கு மேல் கண்டுள்ளதாகவும், இரண்டு நபர்கள் இதுவரை இறந்துவிட்டதாகவும், செய்திகள் வெளியாகி உள்ளது. இந்நோய் தமிழகத்தில் வராமல் தடுத்திடும் பொருட்டு, பல முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை தமிழக அரசு மேற்க்கொண்டு வரும் நிலையில் நகர்புறங்களை மிகவும் தீவிர நடவடிக்கை எடுத்திட 05.03.2020ல் நடைபெற்ற மாவட்ட ஆட்சியர் அவர்களின் ஆய்வுக் கூட்டத்திலும், கூடுதல் தலைமை செயலாளர், நகராட்சி நிர்வாக ஆணையர் மற்றும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அவர்களும் கடிதங்கள் வாயிலாக தெரிவித்து வருகின்ற காரணத்தினால், பொது மக்கள், மாணவர்கள் மற்றும் வியாபாரிகளிடையே விழிப்புணர்வு ஏற்படுத்துகின்ற வகையில் துண்டு பிரசுரங்கள் வழங்கிடவும், பொது மக்கள் அதிக அளவில் கூடும் இடங்களில் கிருமி நாசினிகள் தெளித்திடவும் தெரிவித்து உள்ளார்.

எனவே, முன்னெச்சரிக்கை நடவடிக்கை மேற்கொள்வதற்கு,

| | | | |
|---|---|---|---|
| 1. | கொரோனா வைரஸ் காய்ச்சல் தடுப்பு நடவடிக்கை குறித்தான விழிப்புணர்வு பிரசுரங்கள் நோட்டீஸ் | – | 5000 nos |
| 2. | டோர் ஸ்டிக்கர் | – | 3000 nos |
| 3. | சுவரொட்டிகள் மல்டிகலர் | – | 3000 nos |
| 4. | லைசால் | – | 100 lts |
| 5. | முகவுரை(ஒரு முறை பயன்படுத்துவது) | – | 2000 nos |
| 6. | ஹேண்ட் சானிடைசர் | – | 50 lts |
| 7. | கை உறை | – | 100 nos |
| 8. | கை கழுவும் சோப் மற்றும் அதற்க்கான பாக்ஸ் | – | 100 nos |

ஆகியன அரசு சார்புள்ள கூட்டுறவு நிறுவனங்களில் வாங்கி வழங்குவதற்கு அனுமதியும், அதற்கான உத்தேச செலவினம் ரூ.5.00இலட்சம் இச்செலவினத்தை தூய்மை இந்தியா திட்ட IEC நிதி அல்லது பொது வருவாய் நிதியிலிருந்து செலவு செய்திட மன்றத்தின் பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு: 1. மன்றம் அனுமதிக்கலாம்.

2. அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று திருச்சி தமிழ்நாடு மல்டிபர்பஸ் நிறுவனத்திற்கு உத்திரவு வழங்கியதற்கும், செலவினத்திற்கும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

ந.க.எண்.1030/2020/எச்1

**தீர்மான எண் : 041 அலுவலக குறிப்பினை ஏற்று அனுமதித்த அங்கீகரிக்கப்பட்டது .**

**<u>மன்றபொருள் 10.</u>** நெல்லிக்குப்பம் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் பழுதடைந்த சாலைகளை புதிய தார் சாலையாக மாற்றுவதற்கு TURIP 2019–20 ம் ஆண்டு திட்ட பணியில் சிப்பம் – 1 ல் மாருதி நகர் மெயின் ரோடு , காமராஜ் நகர் மெயின் ரோடு வார்டு எண் . 25 , காமராஜ் நகர் மெயின் ரோடு வார்டு எண் . 7 , வான்பாக்கம் மெயின் ரோடு முதல் சோழவல்லி சுடுகாடு சாலை வரை உள்ள முள்ளிகிராம்பட்டு சாலை ஆகிய இடங்களில் புதுய தார் சாலை அமைக்க திட்ட பேரரணைகள் தயார் செய்யப்பட்டு கடந்த 16.10.2019ல் Roc No . 17349/2019/E3 ன் படி நகராட்சி நிர்வாக ஆணையர் , சென்னை அவர்களிடம் நிர்வாக அனுமதி பெறப்பட்டு அதன் பின்பு கடந்த 23.10.2019ல் Roc No . 25039/2019/Do1 ன் படி நகராட்சி நிர்வாக தலைமை பொறியாளரிடம் ரூ.200.00 இலட்சத்திற்கு தொழில் நுட்ப அனுமதி பெறப்பட்டு அதன் பின்பு ஒப்பந்தபுள்ளிகள் கோரப்பட்டு மேற்படி பணியை குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்த M/s.Jay & Co கடலூர் என்ற நிறுவனத்திற்கு பணி ஒதுக்கப்பட்டது . மேற்படி நிறுவனத்திற்கு கடந்த 09.01.2020ல் பணி உத்திரவு வழங்கப்பட்டு தற்சமயம் பணி துவங்கப்பட்டுள்ளது . இதில் காமராஜ் நகர் பிரதான சாலை வார்டு எண் . 7 மிகவும் தாழ்வான பகுதி என்பதாலும் கடந்த வடகிழக்கு பருவ மழையில் Sub Base மிக மோசமான நிலையில் சேதமடைந்து உள்ளது . இதன் காரணமாக மேற்படி சாலையில் தார்சாலை அமைக்கும் முன்பு மதிப்பீட்டில் உள்ளவாறு செய்ய இயலாமல் உள்ளது . அவ்வாறு மதிப்பீட்டில் உள்ளவாறு செய்தால் தார் சாலை

விரைவில் சேதமடைந்து விடும் நிலை ஏற்படும் . மேலும் மேற்படி காமராஜ் நநர் வார்டு எண் . 7 பிரதான சாலையில் தார் சாலை அமைக்க அடித்தளத்தில் மண் தரையின் மீது GSB கலவை அமைத்த பிறகு தான் WMM சாலை அமைக்க இயலும் என்ற நிலையில் உள்ளது . மேலும் சிப்பம் –1ன் மதிப்பீட்டில் மேற்படி சாலைக்கு மதிப்பீட்டில் GSB கலவைக்கான மதிப்பீடு இல்லை . தற்சமயம் கூடுதலாக G.S.B சாலை சுமார் 525 மீட்டர் நீளம் அமைக்க வேண்டியுள்ளதால் இதற்கான செலவிற்கு உரிய தொகை சிப்பம் – 1ல் சேமிப்பு தொகையில் உள்ளது . மேலும் நிர்வாக அனுமதி மற்றும் தொழில் நுட்ப அனுமதி பெறப்பட்ட ரூ .200.00 இலட்சம் மதிப்பீட்டியிலேயே செய்து முடிக்கலாம் . எனவே மேற்படி பணியின் அவசர அவசியம் கருதியும் , பொது மக்கள் நலன் கருதியும் பணியை விரைந்து முடிக்க வேண்டிய நிலை உள்ளதாகவும் , இதற்காக கூடுதல் செலவினம் ஏதும் இல்லாத காரணத்தாலும் மற்றும் நகராட்சிக்கு எந்த வித நிதியிழப்பும் இல்லை என்பதாலும் பணியை செய்து முடிக்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது .

அலுவலக குறிப்பு :- 1.மன்றம் அனுமதிக்கலாம் .

2. நகராட்சி நிர்வாக மண்டல செயற்பொறியாளர் , செங்கல்பட்டு அவர்களிடம் அனுமதி பெற்று மேல் நடவடிக்கை எடுக்கலாம் .

ந.க.எண்.2422/2019/இ1

**தீர்மான எண் : 042 அலுவலக குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது .**

<u>மன்றபொருள் 11.</u> இந்நகராட்சியில் 14வது நிதிக்குழு மான்ய நிதி திட்டம் 2019–20ம் ஆண்டின் கீழ் கண்ட பணிகள் மேற்கொள்ள 28.01.2020 ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்பட்டன.

| எண் | பணி விவரம் | மதிப்பீடு தொகை (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | வாழப்பட்டு மற்றும் திருக்கண்டேஸ்வரம் காலனி பிரதான சாலையில் தார் சாலை அமைத்தல் பணி , (வார்டு எண். 13 மற்றும் 15 ) | 35.00 |
| 2 | வான்பாக்கம் பிரதான சாலையில் தார் சாலை மற்றும் சிறுபாலம் அமைத்தல் பணி , (வார்டு எண். 7 மற்றும் 9 ) | 50.00 |
| 3 | முள்ளிகிராம்பட்டு பிரதான சாலையில் தார் சாலை மற்றும் சிறுபாலம் அமைத்தல் பணி , (வார்டு எண். 3 ) | 50.00 |
| 4 | திருக்கண்டேஸ்வரம் கஸ்தூாரி பேட்டை தெரு மற்றும் விஜியலஷ்மி நகரில் தார் சாலை அமைத்தல் பணி , (வார்டு எண். 14 ) | 25.00 |
| 5 | ராஜிவ் காந்தி நகர் விரிவாக்கத்தில் தார் சாலை அமைத்தல் பணி , (வார்டு எண். 11 ) | 25.00 |

மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளுக்கு வைப்புத் தொகை மட்டும் திரு .P.ஜெயச்சந்திரன் என்பவரால் செலுத்தப்பட்டு ஒப்பந்தப்புள்ளி வழங்காமல் உள்ளது . தற்போது திரு .P.ஜெயச்சந்திரன் தான் செலுத்திய கீழ் கண்ட விவரப்படியான வைப்புத் தொகையினை வழங்க கோரியதற்கிணங்க அன்னார் செலுத்திய வைப்புத் தொகையினை திரும்ப வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது .

| எண் | பணி விவரம் | வழங்க வேண்டியவைப்புத் தொகை நகராட்சி கருவூல பற்று சீட்டு எண்.(ரூபாயில்) |
|---|---|---|

| | | |
|---|---|---|
| 1 | வாழப்பட்டு மற்றும் திருக்கண்டேஸ்வரம் காலனி பிரதான சாலையில் தார் சாலை அமைத்தல் பணி , (வார்டு எண். 13 மற்றும் 15 ) | 35000/– (094/01/2/19–20/0009482) |
| 2 | வான்பாக்கம் பிரதான சாலையில் தார் சாலை மற்றும் சிறுபாலம் அமைத்தல் பணி , (வார்டு எண். 7 மற்றும் 9 ) | 50000/–(094/01/2/19–20/0009483) |
| 3 | முள்ளிகிராம்பட்டு பிரதான சாலையில் தார் சாலை மற்றும் சிறுபாலம் அமைத்தல் பணி , (வார்டு எண். 3 ) | 50000/–(094/01/2/19–20/0009484) |
| 4 | திருக்கண்டேஸ்வரம் கஸ்துாரி பேட்டை தெரு மற்றும் விஜியலஷ்மி நகரில் தார் சாலை அமைத்தல் பணி , (வார்டு எண். 14 ) | 25000/–(094/01/2/19–20/0009485) |
| 5 | ராஜிவ் காந்தி நகர் விரிவாக்கத்தில் தார் சாலை அமைத்தல் பணி , (வார்டு எண். 11 ) | 25000/–(094/01/2/19–20/0009486) |

அலுவலக குறிப்பு . மன்றம் அனுமதிக்கலாம் .

**ந.க. எண். 0039 /2020/இ1**

**தீர்மான எண் : 043 அலுவலக குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது .**

தனி அலுவலர்,
நெல்லிக்குப்பம் நகராட்சி